No. of Printed Pages : 7

800085

**6306**

பதிவு எண்
Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# Part III — Vocational Subjects

(Engineering and Technology Area)

# நெசவுத் தொழில் நுட்பம் / TEXTILE TECHNOLOGY

( தமிழ் வழி / Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

(மதிப்பெண்கள் : **30**)

**குறிப்பு :** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**I.** (அ) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக: **15x1=15**

**1.** நல்ல பின்னல் நூலுக்கு நம்பர் மாறுபாடு :

(அ) +3 (ஆ) −3 (இ) ±3 (ஈ) ±0.3

**2.** பின்னலுக்கு பயன்படும் முக்கிய விலங்கு இழை :

(அ) சணல் (ஆ) ஒட்டகரோமம்

(இ) கம்பளி (ஈ) பட்டு

[ திருப்புக / Turn over

3. இழுக்கப்பட்ட இழை என்பது :

(அ) பட்டு (ஆ) கம்பளி

(இ) அக்ரிலிக் (ஈ) டெக்ஸர்டு நூல்கள்

4. வேட் சாயத்தின் வேறு பெயர் :

(அ) தொட்டிச் சாயம் (ஆ) ரியாக்டிவ் சாயம்

(இ) புரோசியான் சாயம் (ஈ) அசோயிக் சாயம்

5. காஸ்டிக் சோடாவின் வேதிக் குறியீடு :

(அ) $NaHSO_4$ (ஆ) NaOH

(இ) $Na_2CO_3$ (ஈ) NaCL

6. காலிசெய்வான் என்று அழைக்கப்படும் உப்பு :

(அ) சோடியம் கார்பனேட்

(ஆ) சோடியம் குளோரைடு

(இ) சோடியம் ஹைட்ரோ சல்பேட்

(ஈ) சோடா ஆஷ்

7. டிஸ்பர்சு சாயமிட உகந்த வெப்பநிலை :

(அ) 70°C – 85°C (ஆ) 45°C

(இ) 50°C – 60°C (ஈ) $< 90$°C

8. கைக்கட்டை அச்சு முறையில் மெல்லிய கோடுகள் எதை பயன்படுத்தி ஏற்படுத்துவார்கள் :

(அ) உலோகத் தகடு (ஆ) மெழுகு

(இ) டேபர் (ஈ) ஆணி

9. ஸ்கிரீன் செய்யப் பயன்படும் துணி :

(அ) பாலியெஸ்டர் (ஆ) பருத்தி

(இ) சணல் (ஈ) நைலான் தடிப்பு

10. ஒரு டெண்டில் எத்தனை இழைகள் கோர்க்கப்படுகிறது :

(அ) 1 (ஆ) 2

(இ) விருப்பம் போல் (ஈ) டிசைனிற்கு ஏற்றவாறு

11. கீழ்க்கண்டவற்றுள் எதனை பார்த்து பெக் அடிக்க வேண்டும் :

(அ) டிசைன் (ஆ) பெக் பிளான்

(இ) டிராப்ட் (ஈ) டை - அப்

12. Shedding Tappet - கள் எதில் பொருத்தப்பட்டுள்ளன :

(அ) கிராங் ஷாப்ட் (ஆ) பிக்கிங் ஷாப்ட்

(இ) பாட்டம் ஷாப்ட் (ஈ) ராக்கிங் ஷாப்ட்

13. அங்குலத்தில் உள்ள ஊடை இழைகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் சக்கரம் :

(அ) ஸ்டட் வீல் (ஆ) சேன்ஜ் வீல்

(இ) ராச்செட் வீல் (ஈ) ஸ்டாண்டார்டு வீல்

14. ஊடை நூலை துணியுடன் சேர்த்து அடிப்பது :

(அ) விழுதுகள் (ஆ) புணிப் பன்னை

(இ) விசை முள் (ஈ) பன்னை

15. துணியில் சிறு துவாரங்களை ஏற்படுத்தும் டிசைன் :

(அ) மாக்லினோ (ஆ) ஹக் - அ - பேக்

(இ) சாட்டின் (ஈ) சாட்டீன்

[ திருப்புக / Turn over

(ஆ) **ஓரிரு** வார்த்தைகளில் விடையளிக்கவும் **15x1=15**

**16.** நூலின் சீர்த்தன்மையை சோதிக்கும் கருவிகள் இரண்டினை கூறு.

**17.** பின்னல் இயந்திரங்களின் இருபெரும் பிரிவுகள் யாது?

**18.** நிறமி கோட்பாட்டில் அடிப்படை நிறங்கள் யாவை?

**19.** டிசைன் உருளை எந்த உலோகத்தால் ஆனது?

**20.** அச்சிட்டு சாயமிடுவது எந்த பாணி (style) ஆகும்?

**21.** அச்சிடுதலுக்கு பொதுவான பின் செய்முறை யாது?

**22.** புரோசியான் சாயமிடும் முறைகள் யாவை?

**23.** வேட் சாயத்தை லியுக்கோ காம்பவுண்டாக மாற்ற உதவும் வேதிப் பொருள் யாது?

**24.** அனிலின் உப்பின் வேதிப்பெயர் என்ன?

**25.** கஞ்சிப் பசையில் எண்ணெய் பொருட்களின் உபயோகம் என்ன?

**26.** பிக்கிங் இயக்கத்தின் இரு வகைகள் யாவை?

**27.** நெசவு செய்யும்போது துணி சுருங்குவதை தடுப்பது எது?

**28.** பல வண்ணப் பாவு தயாரிக்கும் பாவாலை எது?

**29.** ஒரு சிட்டம் நூலின் மொத்த நீளம் யாது?

**30.** கூடு போன்ற அமைப்பை துணியில் ஏற்படுத்தும் நெசவு எது?

## பகுதி - II

**II.** எவையேனும் **10** வினாக்களுக்கு மட்டும் **ஐந்து** வரிகளில் விடையளிக்கவும். **10x4=40**

**31.** கேம் பற்றி குறிப்பு வரைக.

**32.** ஊடைப் பின்னல், பாவுப் பின்னல் - வரையறு.

**33.** வேட் சாயத்தின் முக்கிய பண்புகள் யாவை?

**34.** அனிலின் கருப்பு சாயமிடும் முறைகள் யாவை?

**35.** ரீ - ஆக்டிவ் சாயமிடுதலில் இரு நிபந்தனைகள் யாவை?

**36.** ஸ்டென்சில் அச்சிடுதலை விளக்குக?

**37.** உருளை அச்சிடுதலில் டாக்டர் அலகுகள் யாவை?

**38.** சாட்டின் மற்றும் சாட்டீன் நெசவுகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

**39.** பாவுக்காப்பு இயக்கம் என்றால் என்ன? அதன் இரு வகைகள் யாவை?

**40.** துணி உள் இழுக்கும் இயக்கத்தில் உள்ள ஏழு சக்கரங்களின் பெயர்கள் யாவை?

**41.** கைத்தறிக்கு நீளமான பாவு தயாரிக்கும் முறை யாது?

**42.** பன்னை கோர்த்தல் என்றால் என்ன?

[ திருப்புக / Turn over

## பகுதி - III

III. எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்கவும். **5x10=50**

43. ஊடைப் பின்னல் இயந்திரத்தில் நிறுத்தும் இயக்கங்களை (stop motions) விவரி.

44. அச்சிடும் பாணிகள் (styles of printing) பற்றி விவரி.

45. பாலியெஸ்டர் இழைக்கு டிஸ்பர்சுடு சாயமிடுதலைப் பற்றி விரிவாக எழுது.

46. குளிர் முறையில் புரோசியான் சாயமிடும் முறையை விளக்குக.

47. பாவு நூலுக்கு தெருவில் கஞ்சியிடுதலை (street sizing) படம் வரைந்து விவரி.

48. லாட்டீஸ் டாபி (Lattice Dobby) இயங்கும் விதம் பற்றி விளக்குக.

49. நெசவுத் துணியில் ஏற்படும் குறைபாடுகளைக் கூறி ஏதேனும் ஒரு குறைபாட்டை நீக்கும் முறையை விவரி.

## பகுதி - IV

IV. எவையேனும் 4 வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் **இருபக்க** அளவில் விடையளிக்கவும். தேவையான இடங்களில் **படங்களை** வரைக. **4x20=80**

50. லாட்ச்சு ஊசியின் இயக்க நிலைகளை படம் வரைந்து விவரி.

51. உருகிய உலோக முறையில் (STAND FAST MOLTEN METAL METHOD) வேட் சாயமிடுதலை விவரி.

52. ஸ்கிரீன் அச்சு முறையில் அச்சிட ஸ்கிரீன் தயார் செய்தலை விளக்குக.

**53.** விசைத்தறியில் கெட்டிப் பன்னை இயக்கம் (FAST REED MECHANISM) செயல்படும் விதத்தை விவரி.

**54.** கீழ்க்காணும் டிசைன் வரைந்து அதற்கு டிராப்ட், பெக் பிளான் மற்றும் டை-அப் ஆகியவற்றை கட்டத்தாளில் வரைக.

1. 8 இழை சாட்டீன் (Sateen)

2. 10 இழை தேனடை (Honey comb)

**55.** பின்வரும் விவரங்களைக் கொண்டு தயார் செய்த நெசவுத் துணியின் எடையைக் கணக்கிடவும்.

| | | |
|---|---|---|
| துணி நீளம் | - | 80 கெஜம் |
| துணி அகலம் | - | 50 அங்குலம் |
| பாவு / ஊடை நம்பர் | - | $40^s$ |
| அங்குலமொன்றிற்கு பாவு / ஊடை எண்ணிக்கை | - | 40 |
| பாவு நீட்சி | - | 5% |
| ஊடை நீட்சி | - | 10% |

-o0o-